காவேரி மேலணைப்பகுதி.

*109 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவேரியில் மேலணைப் பகுதியில் ஓர் அணை கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், தற்போது எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம். மேல் அணையில் காவேரியின் குறுக்கே ஒரு 'ரெகுலேட்டர்' அமைக்கத் திட்ட மிடப்பட்டிருக்கிறது.

(இ) இத்திட்டம் மத்திய அரசின் நீர்மின் குழுவினரின் ஆய்வில் உள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாயிலே திட்டமிடக்கூடிய நிலையுள்ளது? எந்த எந்தப் பகுதி களுக்குப் பாசனம் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பாசனத்திற்கான திட்டமில்லை இது. வெள்ளப்பெருக்கு ஏற்படும் பொழுது நாசம் ஏற்படாமல் தடுப்பதற்காகத்தான் இந்த அணையைக் கட்டுகிறோம். அதற்காகப்போடப்பட்டுள்ள மதிப்பீடு 212 லட்சம் ஆகும். இந்த ஆண்டு இதற்காக 30 லட்சம் ஒதுக்கி யிருக்கிறோம்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, may I know from the Hon. Minister for Public Works the number of dams on the Cauvery at present and the number of proposals for construction of fresh dams?

THE HON. THIRU P. U. SHANMUGHAM : Sir, I want notice.

திருமதி த. ந. அனந்தநாயகி : இது மத்திய சர்க்காருடைய ஆய்வில் இருக்கிறது என்று சொன்னார்கள். இருந்தாலும் இந்த ஆண்டு 30 லட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எப்பொழுது அவர்கள் ஆய்விற்கு அனுப்பப்பட்டது? இந்த 30 லட்சம் எப்பொழுது சாங்ஷன் செய்யப்பட்டது ?

1973 ஆகஸ்ட் 13]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 1972-73 கடைசிப் பகுதி வரையிலே கடிதம் எழுதியிருக்கிறோம். 1961-லே இது ஆரம்ப மானது. மத்திய அரசாங்கத்தின் ஒப்புதலை எதிர்பார்த்து இந்த அரசு வேலையை ஆரம்பிக்கலாமா என்று யோசனை செய்து கொண்டிருக்கிறது.

Peruvaripallam Dam.

* 110. *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : **Will the** Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) the total quantity of water stored at Peruvaripallam Dam as on February 1973; and

(b) the total area of land likely to benefit therefrom?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) துனக்கடவு நீர்த் தேக்கமும் பெருவாரிப்பள்ளம் நீர்த்தேக்கமும் ஒரு வாய்க்காலால் ஒன்றிணைக்கப்பட்ட ஒரே நீர்த்தேக்கமாகும். இவைகளின் நீர் மட்டம் 1973-ம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதியன்று 1754.64 ஆக இருந்தது. இந்த மட்டத்திற்கு நீரின் கொள்ளளவு 633 மில்லியன் கன அடியாகும்.

(இ) மின் சக்தி உற்பத்தி செய்ய தேவையான குறைந்த பட்ச நீரின் மட்டம் 1761.00 ஆகும். பிப்ரவரி மாதம் முதல் தேதி யன்று நீரின் மட்டம் மின் சக்தி இயக்குவதற்கான குறைந்த பட்ச மட்டத்திற்கும் தாழ்வாக இருந்ததால் குடைவு வழியின் தரை மட்டத்திற்கு மேலே இருந்து 125 மில்லியன் கன அடி நீர் மின்சக்திக்கும் பயன்படாமல் நீர்ப்பாசனத்திற்குப் பயன்பட இருந்தது. இது சர்க்கார்பதி மாற்று வழியின் மூலம் கொண்டு செல்லப்பட்டது. இந்த 125 மில்லியன் கன அடி நீரினால் 1,042 ஏக்கர் பாசன வசதி அடையக்கூடும்.

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவரவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில் மணிமுத்தாறு நீர்த்தேக்கம், பாபநாசம் நீர்த் தேக்கம் ஆகியவைகளின் மூலம் உள்ள விவரத்தைச் சொல்வார் களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தனிக்கேள்வி **வேண்டும்.**